தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி :ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 020/பேரூ/2021

நாள் 11.01.2022

திரு. M. ராஜசேகரன்,
பொத்தனூர், நாமக்கல் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
புன்செய் புகளூர் பேரூராட்சி
கரூர் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் (ம) அஞ்சல், 27/8 கிழக்கு வீதி என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. ராஜசேகரன் அவர்களின் 25.01.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.1.2020ல் பெறப்பட்டு, 20/2020என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் (ம) அஞ்சல், 27/8 கிழக்கு வீதி என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. ராஜசேகரன் என்பவர் தமது 25.1.2020 நாளிட்ட புகார் மனுவில் புன்செய்புகளூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், இந்திய தொல்லியல் துறையினால் பாதுகாக்கப்பட்டு வரும் அருணாட்டார்மலை முருகன் கோவிலைச் சுற்றி முறையற்ற வகையிலும், சட்டத்திற்குப் புறம்பாகவும் கட்டப்பட்டுள்ள வீடுகள், கடைகள் மற்றும் வணிக ரீதியிலான கட்டிடங்கள், இந்திய தொல்லியல் துறையினால் தடைசெய்யப்பட்டுள்ள பகுதியில், அவர்களது தடையின்மைச் சான்று இல்லாமல், கட்டப்பட்டுள்ள நிலையில், அக்கட்டிடங்களுக்கான வரைபட அனுமதி, சொத்துவரி மற்றும் முறையற்ற கட்டிடங்களுக்கு நம்பர் வழங்குதல் ஆகியவை

பேரூராட்சியின் மூலம் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். நகர் ஊரமைப்பு (திருத்த) சட்டம் 2008, பிரிவு 56 மற்றும் 57–ன்படி சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை அகற்றுவதற்கு பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு அதிகாரமளித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.289, வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத் துறை, நாள் 16.12.2010ன்படி மேற்படி கட்டிடங்களை அப்புறப்படுத்திடவும், அதற்கான செலவுகளை புன்செய் புகழூர் பேரூராட்சி முன்னாள் மற்றும் இந்நாள் செயல் அலுவலர்களிடமிருந்து வசூலிக்கவும் மற்றும் தடைசெய்யப்பட்டுள்ள பகுதிகளில் கட்டடங்கள் கட்டப்பட்டதற்கு காரணமான முன்னாள் மற்றும் இந்நாள் செயல் அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள விசாரணை மேற்கொண்டு ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

2. புன்செய் புகழூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 25.08.2021 அன்று இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு ஒப்புகையுடன்கூடிய பதிவு அஞ்சல் மூலம் 26.7.2021 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் திரு. M. ராஜசேகரன் 25.8.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை. புன்செய் புகழூர் பேரூராட்சி செயல் அலுவலர் 25.8.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

“கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம், ஆறுநாட்டார்மலையில் உள்ள முருகன் கோவில் இடம் தொல்லியல் துறையைச் சேர்ந்தது. மேற்கண்ட முருகன் கோவில் அமைந்துள்ள அடிவாரம் இந்துசமய அறநிலையத் துறையைச் சார்ந்ததாகும். இம்மலையடிவாரத்தில் சுமார் 15–20 கடைகளும், சுமார் 100 குடியிருப்புகளும் அமைந்துள்ளன. மேற்கண்ட குடியிருப்புகள் மற்றும் கடைகளுக்கு 1956ஆம் ஆண்டு முதலே சொத்துவரி மற்றும் தொழில் வரி பேரூராட்சியால் வசூலிக்கப்பட்டு வருகிறது. கடந்த 2015–ஆம் ஆண்டு முதல் மேற்கண்ட மலையடிவாரம் மற்றும் கோவில் இடங்களில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டட அனுமதி மற்றும் சொத்துவரி விதிக்கக்கூடாது என இந்து சமய அறநிலையத் துறையிலிருந்து பேரூராட்சியால் கடிதம் பெறப்பட்டுள்ளதையடுத்து மேற்கண்ட கோயில் இடத்திற்கு தற்போது எவ்வித கட்டட அனுமதியும், சொத்து வரியும் விதிக்கப்படுவதில்லை என்பதை இம்முறைமன்றத்தின் முன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக மேற்கண்ட கடைகள் மற்றும் குடியிருப்புகள் குறித்த விவரம் இந்து சமய அறநிலையத் துறையிலிருந்து புன்செய் புகழூர் பேரூராட்சியால் பெறப்பட்ட கடிதம், மேற்கண்ட முருகன் கோவிலின் செயல் அலுவலர், இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான அசையா சொத்துக்களை ஆவணப் பதிவு செய்வதை தடைசெய்ய வேண்டி வேலாயுதம்பாளையம் சார் பதிவாளருக்கு அனுப்பிய 20.7.2015 நாளிட்ட கடிதத்தின் நகல், மனுதாரர் திரு. ராஜசேகரன், மாநில தகவல் ஆணையத்தில் மேற்கண்ட கோவில் தொடர்பாக புகார் செய்ததையடுத்து அப்புகார் மனுவின் மீதான 14.8.2021 நாளிட்ட ஆணையின் நகல் ஆகியவற்றை இம்முறைமன்றத்தில் இன்னும் 3 அல்லது 4 தினங்களில் சமர்ப்பிக்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

3. செயல் அலுவலர், புன்செய்புகழூர் பேரூராட்சி இம்முறைமன்ற நேரடி விசாரணையில் 25.8.2021 ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தினைத் தொடர்ந்து அளித்துள்ள 6.9.2021 நாளிட்ட அறிக்கையில் புன்செய் புகழூர் பேரூராட்சியில் சுமார் 2900 வீடுகள் கோவிலுக்குச் சொந்தமான பகுதிகளில் உள்ளன என்றும், அவற்றில் 2740 வீடுகளுக்கு வரிவிதிப்பு செய்யப்பட்டும், 160 வீடுகளுக்கு வரிவிதிப்பு செய்யப்படாமலும் உள்ளன என்றும், கோவில் நிலங்களுக்கு வரிவிதிப்பு, குடிநீர் இணைப்பு மற்றும் கட்டிட அனுமதி வழங்கக் கூடாது என இந்து அறநிலையத் துறையின் வாயிலாக புன்செய் புகழூர் பேரூராட்சி மற்றும் காகிதபுரம் சிறப்புநிலை பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகளுக்கு உத்தரவிட்டு அனுப்பப்பட்ட கடித ந.க.எண்.567/2015/ஆ4 நாள் 23.9.2015ன் நகலினையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

5. மனுதாரரின் புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள், செயல் அலுவலர், புன்செய்புகழூர் பேரூராட்சி அவர்களது வாக்குமூலம், அவரது அறிக்கை மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் யாவும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்டவை கண்டறியப்பட்டன:-

❖ மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் கோரிய தகவல்களுக்கு பொது தகவல் அலுவலர் மற்றும் செயல் அலுவலர், புன்செய்புகழூர் பேரூராட்சியால் 18.12.2019 நாளிட்ட கடிதத்தில் அளிக்கப்பட்டுள்ள பதிலறிக்கையில் தொல்லியல் துறைக்குச் சொந்தமான இடங்களுக்கு பேரூராட்சியிலிருந்து கட்டிட வரைபட அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்றும், மேலும் மனுதாரர் விரும்பினால் 26.12.2019 தேதியன்று நேரில் பேரூராட்சிக்கு வருகை தந்து ஆவணங்களை பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ மனுதாரர் கரூர் மாவட்டம், புன்செய் புகழூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் இந்திய தொல்லியல் துறைக்குச் சொந்தமான புகழ்வாய்ந்த இடமருகே அமைந்துள்ள ஆறுநாட்டார் மலை முருகன் கோவிலருகே உரிய அனுமதியில்லாமலும், சட்டத்திற்குப் புறம்பாகவும் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு பேரூராட்சி வரைபட அனுமதி அளித்தும், சொத்துவரி விதிப்பும், வீடுகளுக்கு நம்பர் வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், மேற்கண்ட இடத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே வீடுகள் கட்டப்பட்டு, அவற்றிற்கான சொத்து வரி அப்போதிலிருந்தே வசூலிக்கப்பட்டு வருவதாகவும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014, பிரிவு 10 (3) (c)ன்படி முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும், முறைமன்ற நடுவம் விசாரணை செய்தல் கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், மனுதாரரது புகார் மனு விசாரணைக்கு உகந்ததல்ல என்று புன்செய் புகழூர் பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

❖ இந்திய தொல்லியல் துறையின் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கான அனுமதியை புராதன நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்களுக்கு (திருத்தம் மற்றும் சரிபார்ப்பு) (Amendment and

Validation) சட்டம் 2010–ன்படி கட்டிடங்கள் கட்டுவதற்கு முன்பாகவே அனுமதி பெறவேண்டும். எனினும், கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் யாவும் தொல்லியல் துறையால் தடைசெய்யப்பட்டுள்ள பகுதிக்குள் இடம்பெறவில்லை என்பதால், அவற்றிற்கு தொல்லியல் துறையின் அனுமதி பெறவேண்டிய அவசியமும் எழவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

❖ வருவாய்த் துறை ஆவணங்களின்படி சர்வே எண்.375/B யில் அமைந்துள்ள 25.98.5 ஹெக்டேர் நிலங்கள் "நிலவியல் பாறை" என குறிப்பிடப்பட்டுள்ளதென்றும், இந்நிலங்களே அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குச் சொந்தமானதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ பல்லாண்டுகளுக்கு முன்னரே அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குச் சொந்தமான நிலங்களில் கட்டுமானங்கள் எழுப்பப்பட்டுள்ளதால், கோவிலுக்குச் சொந்தமான மேற்படி ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டுமானங்களை அக்கோவிலின் செயல் அலுவலரே (Executive Officer of the said Temple) பொறுப்பாளராவார். மாறாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கான வீட்டு வரி பேரூராட்சிகளின் இயக்குநரின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நிர்ணயிக்கவேண்டியது பேரூராட்சியின் செயல் அலுவலரது கடமையாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

❖ மேற்குறிப்பிடப்பட்டுள்ள கோவிலுக்குச் சொந்தமான சர்வே எண்ணுள்ள நிலங்களில் வீடுகள் கட்டுவதற்கு புன்செய் புகழூர் பேரூராட்சியால் எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை என புன்செய் புகழூர் பேரூராட்சி செயல் அலுவலரால் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

❖ அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள பேரூராட்சிகளின் ஆணையரக கடிதம் ந.க.எண்.334/2005/இ2 நாள் 18.8.2008ன்படி வரிவிதிப்பு மேற்கொள்ளும் முன்னர் அனுமதி பெறாமல் மனை உரிமையாளர்கள் கட்டியுள்ள குடியிருப்பு/தொழிற்சாலை மற்றும் வணிக கட்டிடங்களின் எண்ணிக்கை மற்றும் ஆட்சேபகரமற்ற ஆக்கிரமிப்பு இடங்களில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் இவற்றின் விவரங்களை சேகரித்து தொகுத்தபின் சொத்துவரி விதிப்பிற்குட்படுத்தலாம் என்றும், எவ்வாறாயினும் அடிமனைக்கு உரிமையுள்ளவர் பெயரில் பத்திரப்பதிவு ஆவணங்களின் அடிப்படையில் சொத்துவரி விதிக்கப்படவேண்டும். சிறப்பு அறிவிப்புகளில் கீழ்க்கண்ட நிபந்தனைகள் சேர்க்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது:-

(1) அடிமனை நீங்கலாக மேற்கட்டிடத்திற்கு (superstructure) மட்டுமே வரி விதிக்கப்படுகிறது

(2) சொத்துவரி விதிப்பதால் அனுமதியற்ற கட்டுமானம்/கட்டிடம் முறைப்படுத்தப்பட்டதாக கருதப்பட மாட்டாது

(3) அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களை 1920ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகள் மற்றும் மலைவாழ் இடங்களின் கட்டிட விதிகள் ஆகியவற்றின் கீழ் உரிய ஷரத்துக்களின்படி நடவடிக்கை மேற்கொண்டு, இடித்து அப்புறப்படுத்தப்படும்.

நீர்வழித் தடம் மற்றும் ஏரிபுறம்போக்கு முதலிய நீர்நிலைகள் மற்றும் நீர் நிலைகள் சார்ந்த இடங்கள் மற்றும் அரசு நிலங்களில் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி செய்யப்படலாகாது. புறம்போக்கு/கோயில் நிலங்கள் மற்றும் தனியார் நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டிடங்களில் வசிப்பவர்கள் நிர்ணயித்துள்ள உறுதிமொழியை பத்திரத்தில் நோட்டரி பப்ளிக் முன் கையொப்பம் இட்டு வரி மதிப்பீடு செய்யக் கோரும் விண்ணப்பத்தினை பெற்று வரிவிதிப்பு செய்யவேண்டும். நோட்டரி பப்ளிக் சான்றுரைத்த உறுதிமொழிப் பத்திரத்துடன் இல்லாத விண்ணப்பங்களுக்கு வரிவிதிப்பு செய்யலாகாது.

- ❖ மலையடிவாரம் மற்றும் கோவில் இடங்களில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டட அனுமதி மற்றும் சொத்துவரி விதிக்கக்கூடாது என இந்துசமய அறநிலையத் துறையிலிருந்து புன்செய் புகழூர் பேரூராட்சி கடிதம் பெற்றுள்ளதையடுத்து, ஆறுநாட்டார்மலை கோயில் இடத்திற்கு தற்போது பேரூராட்சியால் எவ்வித கட்டட அனுமதியும், சொத்துவரியும் விதிக்கப்படுவதில்லை என்று புன்செய் புகழூர் பேரூராட்சி செயல் அலுவலரால் உறுதியளித்து வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது
- ❖ மேலும், உதவி ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், புகழிமலை, கரூர் மாவட்டம், புன்செய் புகழூர் மற்றும் காகிதபுரம் பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதம் ந.க.எண்.567/2015/ஆ4 நாள் 23.9.2015–ல் கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், வேலாயுதம்பாளையம், புகழிமலை அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களின் புல எண்/உட்பிரிவு, பட்டா எண், விஸ்தீரணம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, அந்நிலங்களுக்கு தனிநபர் பெயரில் சொத்துவரி, குடிநீர் இணைப்பு மற்றும் கட்டமைப்புகள் கட்டுவதற்கு வரைபட அனுமதி வழங்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது உறுதிசெய்யப்படுகிறது.

6. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், புன்செய் புகழூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்தினைத் தொடர்ந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில், மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் ஆறுநாட்டர்மலை அடிவாரம் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோவில் இடங்களில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்ட அனுமதி மற்றும் சொத்துவரி ஏதும் புன்செய் புகழூர் பேரூராட்சியால் விதிக்கப்படுவதில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள சுமார் 15–20 கடைகள் மற்றும் 100 குடியிருப்புகளுக்கு 1956ஆம் ஆண்டு முதலே சொத்துவரி மற்றும் தொழில்வரி பேரூராட்சியால் வசூலிக்கப்பட்டு வருவதும் உறுதிசெய்யப்பட்டுள்ளதால், மனுதாரர் குறிப்பிட்டுள்ளதுபோல் சட்டத்திற்கு புறம்பாகவும், உரிய அனுமதி இல்லாமலும் கட்டப்பட்டுள்ள இடங்களுக்கு புன்செய் புகழூர் பேரூராட்சியால் கட்டட அனுமதி மற்றும் சொத்துவரி ஏதும் முறையற்ற வகையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகிறது. மனுதாரர் தொடர்ந்து பல்வேறு புகார் மனுக்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு அளித்துவரும் நிலையில், இம்முறைமன்ற

நடுவத்தின் அழைப்பாணைகளின்பேரில் நேரடி விசாரணைக்கு ஆஜராகாமலும், உரிய காரணங்களைக் குறிப்பிட்டு தம்மால் நேரில் ஆஜராக முடியாததற்கு விலக்கு கோரியோ அல்லது மாற்று தேதிகளில் விசாரணையை மேற்கொள்ளுமாறு அனுமதி கடிதம் எதனையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கவில்லை. இதுபோன்ற நடைமுறைகளை இனிவரும் காலங்களில் தவிர்க்குமாறும், தம்மால் அளிக்கப்படும் புகார் மனுக்கள் குறித்து மேற்கொள்ளப்படும் நேரடி விசாரணைகளில் தவறாது அழைப்பாணைகளின்பேரில் நேரில் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்படுகிறார். புன்செய் புகழூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில், இப்புகார் மனு மீதான நடவடிக்கை இத்துடன் முடித்துவைக்கலாமென கருதி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 11 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)-/ x x x x

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு.M. ராஜசேகரன்,
27/8, கிழக்குத் தெரு, பொத்தனூர், நாமக்கல் மாவட்டம்–638 181

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (உறையில் பெயரிட்டு)

செயல் அலுவலர், புன்செய் புகழூர் பேரூராட்சி,
புன்செய்புகழூர், வேலாயுதம்பாளையம், கரூர் மாவட்டம்–639 117.
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

12/01/22

செயலாளர்

12.1.22